සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாந் தவணைப் பரீட்சை - 2020
## சைவநெறி / ශෛව ධර්මය – I

சுட்டெண்:.................................... தரம் : **10** நேரம்: 1 மணி

(I) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

1. அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளில் நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்பவர்.
   1) சிவபெருமான் 2) விநாயகர் 3) முருகன் 4) உமாதேவியார்

2. மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வது
   1) வாய்மை 2) ஈகை 3) ஒப்புரவு 4) பணிவு

3. “சத்தியம் வத” எனும் மகா வாக்கியத்தைக் கொண்டது
   1) வேதம் 2) ஆகமம் 3) புராணம் 4) உபநிடதம்

4. ”இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்...........” என்று கூறியவர்,
   1) சுவாமி விவேகானந்தர் 2) சுவாமி விபுலானந்தர்
   3) கச்சியப்பசிவாச்சாரியார் 4) ஆறுமுகநாவலர்

5. திரௌபதை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய இதிகாசக்கதை
   1) மகாபாரதம் 2) இராமாயணம்
   3) சிலப்பதிகாரம் 4) கந்தபுராணம்

6. கோயிலுள்ள கொடிமரத்தின் திசைச்சீலை எதனைக் குறிக்கிறது.
   1) பதி 2) பசு 3) ஆணவம் 4) கன்மம்

7. ‘சகலாகம பண்டிதர்’ எனச் சிறப்பித்து அழைக்கப்படுபவர்
   1) மெய்கண்ட தேவர் 2) அருணந்தி சிவாச்சாரியார்
   3) மறைஞான சம்பந்தர் 4) உமாபதி சிவாச்சாரியார்

8. சங்கம வழிபாடு மூலம் வீடு பேறு பெற்றவர்
   1) சிறுத்தொண்டர் 2) திருமூலர்
   3) கண்ணப்பர் 4) குலச்சிறையார்

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது

9. நாட்டார் தெய்வங்களுள் ஒன்றாகிய வைரவர் பொருமானுக்குரிய விரத நாட்கள்
   1) பங்குளி உத்தரம், ஆனி உத்தரம்
   2) வைகாசி விசாகம், ஆனி உத்தரம்
   3) சித்திரைபரணி, ஐப்பசிப் பரணி
   4) ஆவணி ஞாயிறு, பங்குனித் திங்கள்

10. ஐப்பசி மாத தேய்பிறைச் சதுர்த்தசியில் கொண்டாடப்படும் பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்,
   1) நரகாசுரன் 2) மகிஷாசுரன் 3) தற்காசுரன் 4) கஜமுகாசுரன்

11. வேதங்களின் மறுபெயர்கள் அடங்கிய தொகுதி
   1) எழுதாமறை, சங்கிதை, சுருதி
   2) அபௌர்ஷேயம், எழுதாமறை, சங்கிதை
   3) சுருதி, ஆரணியகம், அபௌர்ஷேயம்
   4) சுருதி, அபௌர்ஷேயம், எழுதாமறை

12. திருக்கூடச்சிறப்பு என்னும் பகுதி அடங்கியுள்ள நூல்
   1) கந்த புராணம் 2) பெரியபுராணம்
   3) கோயிற் புராணம் 4) திருவிறையாடற் புராணம்

13. "குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்.........." எனும் தேவாரத்திற் குறிப்பிடப்படும் சிவவடிவம்.
   1) நடராஜவடிவம் 2) சோமாஸ்கந்த வடிவம்
   3) கங்காதரர் வடிவம் 4) தட்சணாமூர்த்தி வடிவம்

14. பிள்ளையார் கதை எனும் நூலை இயற்றியவர்
   1) அரங்கநாத ஐயர் 2) சின்னத்தம்பி புலவர்
   3) வரத பண்டிதர் 4) சுவாமிநாத பண்டிதர்

15. காலத்தால் முந்திய இந்திய இசைநூல் என போற்றப்படுவது
   1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வம்

16. மூவகை ஆன்மாக்கள்
   1) பதி, பசு, பாசம் 2) ஆணவம், கன்மம், மாயை
   3) சத்து, அசத்து, சதசத்து 4) சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்

17. உமாபதி சிவாச்சாரியார்
   1) சமய குரவர்களுள் ஒருவர் 2) ஆழ்ரெவர்களுள் ஒருவர்
   3) சந்தான குரவருள் ஒருவர் 4) சித்தர்களுள் ஒருவர்

18. கோயில்களில் நடைபெறும் மகோற்சவத்தில் கொடியேற்றம் குறித்து நிற்பது,
   1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) அருளல்

19. திருஞானசம்பந்தரை அழைத்துப் பாண்டி நாட்டில் சைவசமயத்தை மீண்டும் மலர்ச்சி பெறச் செய்த இரு பெரியார்கள்,
   1) மங்கையர்க்கரசியாகும், குலச்சிறையாரும்
   2) திலகவதியாரும், குலச்சிறையாரும்
   3) பரவையாரும், சங்கிலியாகும்
   4) மங்கையர்க்கரசியாரும், கூன்பாண்டியனும்

Education கல்வி அධ්‍යාපන

20. பெரியார் சு. இராசரத்தினம் அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்புபட்ட சைவநிறுவனம்
   1) சைவபரிபாலன சபை
   2) சைவ வித்தியாவிருத்திச்சங்கம்
   3) இராமகிருஷ்ண மிஷன்
   4) விவேகானந்த சபை

21. 'ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே........' என்று பாடியவர்
   1) நக்கீரர்
   2) திருமூலர்
   3) சேக்கிழார்
   4) அப்பர்

22. புராதன இலங்கையில சிவ வழிபாட்டினைப் பின் பற்றிய ஆதிக்குடியினர்.
   1) ஆரியர், திராவிடர்
   2) இயக்கர், நாகர்
   3) வேடர், கின்னரத்
   4) ஆக்கத், வானரர்

23. சித்தாமிர்த புட்கரணியைத் தீர்த்தமாகக் கொண்டு அமைந்துள்ள ஆலயம்
   1) களுதாவளை பிள்ளையார் ஆலயம்
   2) கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ் வரம்
   3) நல்லூர் கந்தசுவாமி கோயில்
   4) நயினை நாக பூஷணி அம்மன் ஆலயம்

24. இருளிலும் கொடிய மலம் என்று கூறப்படுவது,
   1) மாயாமலம்
   2) ஆணவமலம்
   3) கன்மமலம்
   4) ஆகாமியமலம்

25. திருஞானசம்பந்தர் " மடையில் வாளை........." என்னும் பதிகத்தைப் பாடிய போது நிகழ்ந்த அற்புதம்.
   1) ஐந்தெழுத்துப் பொறித்த பொற்றாளம் கிடைத்தமை
   2) முதலை உண்ட சிறுவன் மீண்டமை
   3) பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கியமை
   4) கல் தெப்பமாக மிதந்தமை

Education கல்வி අධ්‍යාපන

26. மனித வாழ்க்கையின் படிநிலைகள்
   1) அறம், பொருள், இன்பம், வீடு
   2) சத்திரியர், பிராணத், வைசியர், சூத்திரர்
   3) பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், துறவறம்
   4) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

27. பூர்வக்கிரியைகளுள் அடங்காதது
   1) அன்னப்பிராசனம்
   2) வித்தியாரம்பம்
   3) திருமணம்
   4) சபிண்டீகரணம்

28. தண்ணளி வெண்குடை வேந்தன் யார்?
   1) விஜயாலயசோழன்
   2) இராஜேந்திரசோழன்
   3) மனுநீதிகண்ட சோழன்
   4) இராஜராஜ சோழன்

29. "பாலுக்குப் பாலகன் வேண்டி......" எனும் பாடல் பாடப்பட்ட தலம்
   1) கோயில்
   2) திருவீழிமிழலை
   3) திருக்குழமலம்
   4) சீர்காழி

30. தருமசேனரின் தமக்கையார்
   1) திலகவதியார்
   2) புனித வதியார்
   3) பகவதியம்மையார்
   4) இசைஞானியார்

31. திருமூலர் அருளிய நூல்
    1) தமிழாகமம்
    2) அற்புத திருவந்தாதி
    3) திருக்கோவை
    4) சிவஞானசித்தியார்

32. சுவாமி விபுலானந்தரின் பெற்றோர் பெயர் யாது?
    1) கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மமையார்
    2) விசுவநாததத்தர், புவனேஸ்வரி தேவி
    3) சாமித்தம்பி, கண்ணம்மை
    4) சம்புபாதாசிரியர், சிவ ஞானவதியார்

33. கொக்கட்டிச் சோலை தான் தோன்றீச்சரத்தில் குடுக்கைகூறும் கல்வெட்டு வாசிக்கப்படுவதன் நோக்கம்.
    1) திருவிழாவில் பங்கேற்ற அனைவரையும் கௌரவித்தல்
    2) திருவிழாவின் உபகாரர்களுக்கு மதிப்பளித்தல்
    3) கோயில் வண்ணக்கர்களுக்குத் தானம் வழங்குதல்
    4) சங்கமர் எனப்படும் வீரசைவ குருமார்களுக்குப் பட்டம் சூட்டுதல்

34. ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்த பிரதமை முதல் சஷ்டி ஈறாக ஆறு நாட்கள் அனுட்டிக்கப்படும் விரதம்.
    1) விநாயகசஷ்டி
    2) நவராத்திரி
    3) கேதாரகௌரி
    4) கந்தசஷ்டி

35. இலங்கையை சிவபூமி என அழைத்துச் சிறப்பித்தவர்
    1) அருணகிரிநாதர்
    2) திருமூலர்
    3) திருஞானசம்பந்தர்
    4) சுந்தரமூர்த்திநாயனார்

36. சைவசமயத்தின் முழுமுதற் கடவுள்
    1) விநாயகர்
    2) சிவ பெருமான்
    3)விஷ்ணு
    4) பிரம்மா

37. இறைவன் குடியிருக்கும் இடம் மட்டுமன்றி எமது பண்பாடுகள் வளர்க்கப்படுகின்ற இடமாகவும் கருதப்படுவது.
    1) குடிமனைகள்
    2) ஆச்சிரமங்கள்
    3) பாடசாலைகள்
    4) கோயில்கள்

- பின்வரும் அட்டவணையில் A - I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 - 40 வரையான வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A - அருணந்திசிவாச்சாரியர் | D - ஐப்பசி மாத சுவாதி | G - வேதம் |
| B - திருஞான சம்பந்தர் | E - புரட்டாதி பூரம் | H - இருபாஇருப∴து |
| C - மெய்கண்டார் | F - வைகாசி மூலம் | I - சிவஞானபோதம் |

38. "சுவேதனப் பெருமாள்" எனும் நாமத்தை உடையவருடன் தொடர்புடைய தொகுதி
    1) CDI
    2) BEI
    3) AFH
    4) CEH

39. ஆணவத்தின் சொரூபம் யாது? என்று வினா எழுப்பியவருடன் தொடர்புடைய தொகுதி?
    1) AEI
    2) ADH
    3) BEG
    4) CDG

40. யாழ்முரிப் பதிகத்தோடு தொடர்புடைய தொகுதி
    1) ADI
    2) BDG
    3) BFG
    4) CFH

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது


kalvi.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாந் தவணைப் பரீட்சை - 2020
## சைவநெறி / ශෛව ධර්මය – II

சுட்டெண்:.................................. தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலங்கள்

♦ **பின்வரும் வினாக்களில் முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
   1) சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் இரண்டு தருக.
   2) வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
   3) கன்னிகாதானம் என்றால் என்ன?
   4) சைவசமயிகள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   5) இரதோற்சவம், சூர்ணோற்சவம் முதலிய உணர்த்தும் இறைவனது தொழில் எது?
   6) தடுத்தாட் கொண்ட புராணம் அமைந்துள்ள நூல் எது?
   7) கிராமியத் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய கலைகள் நான்கு எழுதுக.
   8) பஞ்சபூதங்கள் யாவை?
   9) சங்கம வழிபாடு என்பது யாது?
   10) இலங்கையில் மிக உயரமான கொடிக்கம்பத்தை கொண்ட ஆலயம் யாது?

2. 1) மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
   2) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
      அ) “யாவர்க்குமாம் இறைவற்கு.”
      ஆ) “நாம் ஆர்க்கும் குடியல்வோம்”
      இ) “மீனா அடிமை உமக்கே”
      ஈ) “தண்ணளி வெண்குடை”
      உ) “கற்றவர் விழுங்கும்”

3. “பதி, பசு, பாசம் ஆகியன முப்பொருள்களாகும் சைவசித்தாந்தம்.”
   1) சைவசித்தாந்தம் குறிப்பிடும் பதியின் இரண்டு நிலைகளையம் குறிப்பிடுக.
   2) பசுவின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   3) மும்மலங்களுள் ஆணவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

4. இலங்கையில் சைவமும் தமிழும் தழைக்கப் பணியாற்றிய ஈழத்துச் சான்றோர்களுள் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர்.
   1) சுவாமி விபுலானந்தர் இசைக்கலை சார்ந்தும் நாடகத்துறை சார்ந்தும் எழுதிய நூல்கள் யாவை?
   2) விபுலானந்தர் ஆசிரியராகத் திகழ்ந்த சஞ்சிகைகள் யாவை?
   3) விபுலானந்தரின் சமூகப்பணிகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.



kalvi.lk

5. "திருநாவுக்கரசர் சமணசமயம் சார்ந்து பின் சைவத்துக்கு மீண்டார்"
   1) திருநாவுக்கரசு நாயனார் "உழவாரப் படையாளி" என அடைக்கப்பட காரணம் யாது?
   2) திருநாவுக்கரசு நாயனாரின் அற்புதங்கள் மூன்று தருக.
   3) திருநாவுக்கரசு நாயனாரின் நின்றநெறி, முத்தி குருபூசைத்தினம், இறுதியில் பாடியப்பதிகம் ஆகிய விபரரங்களைக் குறிப்பிடுக.

6. "சடங்குகளின்றி நாட்டார் வழிபாடு எதுவும் இடம்பெறுவதில்லை"
   1) நாட்டார் வழிபாட்டின் மறு பெயர்கள் இரண்டு தருக.
   2) இலங்கையிலுள்ள பிரதான திரௌபதியம்மன் ஆலயங்கள் நான்கு தருக.
   3) வைரவரின் தோற்றப் பொலிவை விளக்குக.

7. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   1) சைவவித்தியா விருத்திச் சங்கம்
   2) கந்தசஷ்டி
   3) வேதங்கள்
   4) திருமூலர்

Education கல்வி අධ්‍යාපන

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**